பிரதம செயலாளர் செயலகம், வடக்கு மாகாண சபை
ප්‍රධාන ලේකම් කාර්යාලය, උතුරු පළාත් සභාව
Chief Secretary's Secretariat, Northern Provincial Council
மாகாணத்திறைசேரி
පළාත් භාණ්ඩාගාරය
Provincial Treasury

மாகாண சபை வளாகம்,
A9 வீதி, கைதடி,
யாழ்ப்பாணம்.

පළාත් සභාව සංකීර්ණය,
A9 පාර, කයිදඩි,
යාපනය.

Provincial Council Complex
A9 Road, Kaithady,
Jaffna.

My No:NP/09/BDT/05/CIR-BDT/2022

Date: 04.05.2022

செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
நியதிச்சட்ட நிறுவனத் தலைவர்கள்,
வடக்கு மாகாணம்.

**அரசாங்க செலவீனங்களை முகாமை செய்தல்.**

மேற்படி நிதி அமைச்சின் 26.04.2022 ஆம் திகதிய 03/2022 ஆம் இலக்க தேசிய வரவுசெலவுத்திட்ட சுற்றுநிருபம் தொடர்பானது.

குறித்த சுற்றுநிருபத்தில் கூறப்பட்டுள்ள செலவினத்தினை முகாமை செய்தல் தொடர்பான அறிவுறுத்தல்களை உடன் கவனத்திற் கொண்டு செயற்படுவதுடன் இதற்கு முன்னர் 2022 பாதீட்டுச் செலவு தொடர்பாக நிதியமைச்சினாலும், பொது நிர்வாக அமைச்சினாலும் மற்றும் மாகாணத் திறைசேரியினாலும் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களையும் கருத்திற்கொண்டு செயற்படுமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியினையும் நிதி நெருக்கடியினையும் கருத்திற் கொண்டு பாதீட்டுச் செலவு விடயத்திற்கமைய அத்தியாவசியமான செலவுகளிற்கு முன்னுரிமை வழங்குவதுடன் விடயத் தலைப்புக்களில் வழங்கப்பட்ட பாதீட்டு ஏற்பாடுகளுக்குள் செலவீனங்களை சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் மற்றும் விளைதிறனாகவும் முகாமை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

1. பாதீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ஒதுக்கீடுகளே குறித்த விடய இறுதி ஏற்பாடாகும். இப்பாதீட்டு விடயத்தையிட்டு மேலதிக ஒதுக்கீடுகள் வகை மாற்றங்கள் அனுமதி நிதி நெருக்கடி காலத்தில் வழங்கப்படமாட்டாது. இப் பாதீட்டு ஒதுக்கீட்டுக்குள் முகாமை செய்யும் பொருட்டு பின்வரும் விடயங்களை கருத்தில் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

- ➢ மேலதிகநேர அனுமதி சபையை சகல நிறுவனங்களிலும் நியமித்து அந் நிறுவனங்களுக்குரிய பாதீட்டு ஒதுக்கீட்டு எல்லைகளை விஞ்சாது அனுமதிகளை வழங்கும் பொருட்டு உத்தியோகத்தர்களது மாதாந்த எல்லைகளை குறைத்தல் மற்றும் மிக அத்தியாவசிய சேவைகளிற்கு மாத்திரம் அனுமதி வழங்கல்.

- ➢ எவ்வகையிலும் அலுவலர்களது மேலதிக நேர ஒதுக்கீட்டு அனுமதி அவர்களது மாதாந்த அடிப்படைச் சம்பளத்தை விஞ்சாத வகையில் பேணுவதற்கு ஏற்ற பொறிமுறையை உருவாக்கிக்கொள்ளல்

பிரதம செயலாளர்
ප්‍රධාන ලේකම්
Chief Secretary
Tel : 021 222 0843 (Dir)
: 021 222 0840 (Gen)
Fax : 021 222 0841
E-mail: chiefsecnpc@gmail.com

பிரதிப்பிரதம செயலாளர்
නියෝජ්‍ය ප්‍රධාන ලේකම්
Deputy Chief Secretary
Tel : 021 222 0850 (Dir)
: 021 222 0854(Gen)
Fax : 021 222 0853
E-mail: npctreasury@gmail.com

2. உள்நாட்டுப் பிரயாணம், எரிபொருள், வாகனப்பராமரிப்புக் கட்டணங்கள், செலவுகள் மிகப்பாரிய அளவில் அதிகரித்துக் காணப்படுவதால் இச் செலவுகளை மேற்படி மேலதிக ஒதுக்கீட்டு அனுமதியினை எதிர்பாராது முகாமை செய்வதற்கு அரச கடமைப் பயணங்களை மிகக்குறைந்த மட்டத்தில் பேணுவதற்குரிய மிகப்பொருத்தமான தெரிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

உ+ம்:- Zoom தகவல் முறைமையிலான கூட்டம், குழுமப் பயணம், திட்டமிட்ட பயணங்கள் பிராந்திய அலுவலர்களது உதவி, குழும வாகனங்களது எரிபொருள் மாதாந்த எல்லையைக் குறைத்து மீள அமைத்தல்.

3. வழங்கல்களின் கிடைப்பனவு குறைந்து செல்வதுடன் அவற்றின் விலைகள் எதிர்பார்க்க முடியாத வகையில் அதிகரித்துச் செல்வதாலும் வழங்கல்களை சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், விளைதிறனாகவும் பயன்படுத்துவதற்கு ஏற்ற நடைமுறைகளை பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

உ+ம்:-

- அரச நிகழ்வுகள், திறப்பு விழாக்கள், கருத்தரங்குகள் மற்றும் முன்னுரிமையற்ற கூட்டம், நிகழ்வுகளைத் தவிர்த்தல்.
- மின்னணுத் தகவல் தொடர்பு முறைகளை ஊக்குவித்தலும், மின்னணுத் தகவல் முறையில் அவசியமான கூட்டங்களை நடாத்துதல்
- உணவு வழங்குதல் கொடுப்பனவுகளை தற்போதைய ஒப்பந்த அடிப்படையிலான விலைகளில் கொடுப்பனவுகளை வழங்குவதுடன், எதிர்வரும் காலங்களிற்கு குறைந்த காலம் (3மாதம்) கொண்ட ஒப்பந்தம் மேற்கொள்ளுதல்.

4. ஒப்பந்த அடிப்படையிலான பயன்பாட்டுச் சேவை செலவுகளிற்கு ஏற்கனவே வழங்கப்பட்ட தேசிய பாதீட்டு திணைக்களம் மற்றும் பொது நிர்வாக அமைச்சு சுற்றுநிருபங்களது அறிவுறுத்தல்களை இறுக்கமாகக் கடைப்பிடிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.மேலும் பயன்பாட்டுச் சேவை செலவுகள் தொடர்பான புதிய ஒப்பந்தங்கள், ஒப்பந்தத் தொகை அதிகரிப்புக்கள் முற்றாகத் தவிர்க்கப்படுவதுடன் அவசியமானவிடத்து பிரதம செயலாளரின் அனுமதியைப் பெற்றுக்கொண்ட பின்னரே ஒப்பந்தம் செய்யப்பட வேண்டும்.

5. மானியங்கள், உதவுத்தொகைகள் தொடர்பான கொடுப்பனவுகளின் போது மேற்படி நிதியமைச்சின் 26.04.2022 ஆம் திகதிய 03/2022 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றுநிருபத்தின் 3(VIII) மற்றும் (3*II) பந்தியில் கூறப்பட்ட அறிவுறுத்தல்கள் கவனத்தில் கொள்ளப்படுவதை உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

6. மூலதன அபிவிருத்தி வேலை திட்டமிட்டு மேற்படி நிதியமைச்சின் 26.04.2022 ஆம் திகதிய 03/2022 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றுநிருபத்தில் 3(I) முதல் 3(VI) வரையான அறிவுறுத்தல்கள் மிகக் கவனமாகக் கைக்கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்வதுடன் அவை தொடர்பிலான முன்னேற்ற அறிக்கையையும் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எஸ்.எம்.சமன் பந்துலசேன.
பிரதம செயலாளர்,
வடக்கு மாகாணம்.

எஸ்.எம். சமன் பந்துலசேன
பிரதம செயலாளர்
வட மாகாணம்

பிரதி:- செயலாளர், கௌரவ ஆளுநர் செயலகம், வடக்கு மாகாணம். (கௌரவ ஆளுநரிடம்தெரியப்படுத்துவதற்காக)